இந்திய அரசாங்கம்

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# ஆரியத் திருமணத்தைச் செல்லுந்தன்மையுடையதாக்கும் சட்டம், 1937

(சட்ட எண் 19/1937)

(1993, டிசம்பர் 31 அன்று இருந்தவாறு)

# THE ARYA MARRIAGE VALIDATION ACT, 1937

(Act No. 19 of 1937)

(As on the 31st December, 1993)

தமிழாக்கம் :

இந்திய அரசாங்கத்திற்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

சென்னை 9.

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2003

31-49

## முன்னுரை

1993, டிசம்பர் 31 ஆம் தேதியிலிருந்தவாறுள்ள ஆரியத் திருமணத்தைச் செல்லுந்தன்மையுடையதாக்கும், 1937 (சட்ட எண் 19/1937) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது, 2001 மார்ச் 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி XV பிரிவு 1, தொகுதி I-இன் 1-ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ்மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973இன் (50/1973) பிரிவு 2இன் கூறு (அ)வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி,
17 மார்ச், 2001.

(ஒப்பம்) . . . . .
இந்திய அரசாங்கச் செயலாளர்.

## ஆரியத் திருமணத்தைச் செல்லுந்தன்மையுடையதாக்கும் சட்டம், 1937

(சட்ட எண் 19/1937)

### பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பும், அளாவுகையும். | 1 |
| 2. | ஆரிய சமாஜத்தார்களிடையேயான திருமணம் செல்லுந்தன்மையற்றது ஆகாது. | 1 |

# ஆரியத் திருமணத்தைச் செல்லுந்தன்மையுடையதாக்கும் சட்டம், 1937

## (சட்ட எண் 19/1937)

[1937, ஏப்ரல் 14]

ஆரிய சமாஜத்தார்களிடையே நடப்பிலுள்ள திருமணங்களின் செல்லுந்தன்மை குறித்து ஏற்பளிப்பதற்கும், ஐயப்பாடுகளை அகற்றுவதற்குமான ஒரு சட்டம்.

இந்துக்களுள் ஆரிய சமாஜத்தார்கள் என்று வழங்கப்படும் ஒரு வகுப்பினரிடையே செய்து கொள்ளப்படும் திருமணங்களின் செல்லுந்தன்மை குறித்து ஏற்பளிப்பதும், ஐயப்பாடற்ற நிலையை ஏற்படுத்துவதும் உகந்ததாக இருப்பதால் ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

குறுந்தலைப்பும் அளாவுகையும்

1. (1) இந்தச் சட்டம், ஆரியத் திருமணத்தைச் செல்லுந்தன்மையுடையதாக்கும் சட்டம், 1937 என்று வழங்கப்பெறும்.

[1][(2) இது [2][1956, நவம்பர் முதல் தேதியை ஒட்டி முன்பு, பகுதி ஆ மாநிலங்களில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள்] நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்; மற்றும் இந்தியாவின் குடிமக்கள் எங்கெங்கிருந்தாலும் அவர்களுக்குங்கூட இது பொருந்தும்.]

ஆரியசமாஜத்தார்களிடையேயான திருமணம் செல்லுந்தன்மையற்றது ஆகாது.

2. இந்துச் சட்டத்தின் வகையம், வழக்காறு அல்லது வழக்கம் எதுவும் இதற்கு மாறாக இருந்தபோதிலும், திருமணத்தின்போது ஆரிய சமாஜத்தார்களாக இருந்த இருவர்களுக்கிடையே இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்போ, பின்போ, செய்து கொள்ளப்படும் திருமணம் எதுவும், அந்தத் தரப்பினர்கள் எப்போதாயினும் இந்துக்களின் வெவ்வேறு சாதிகளை அல்லது வெவ்வேறு உள்சாதிகளைச் சார்ந்தவர்கள் என்று, அல்லது அந்தத் தரப்பினர்கள் இருவருள் ஒருவர் அல்லது அவ்விருவரும் அந்தத் திருமணத்திற்கு முன்பு எப்போதாயினும் இந்து சமயம் அல்லாத பிற ஒரு சமயத்தைச் சார்ந்திருந்தனர் என்ற பொருண்மையின் காரணமாக மட்டுமே செல்லுந்தன்மையற்றதாக அல்லது செல்லுந்தன்மையற்றதாக இருந்திருப்பதாக ஒருபோதும் கொள்ளப்படுதல் ஆகாது.

---

1 சட்டங்கள் இணக்க ஆணை, 1950 இனால் முந்திய உட்பிரிவு (2) க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

2 3 சட்டங்கள் இணக்க ஆணை, 1956 இனால் "பகுதி ஆ மாநிலங்கள்" என்னும் சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டன.